# முதலாந் தவணைப் பரீட்சை - 2014

## நல்லூர், யாழ்ப்பாணம்

## வணிகக் கல்வியும் கணக்கீடும்

தரம் -10 நேரம் - 3 மணி

பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. இன்று உலகம் "சர்வதேச கிராமம்" எனப்படுகிறது. இதற்கு பங்களிப்பு செய்த முக்கிய காரணியாக கருதப்படுவது
1. பண்டமாற்று 2. பணப்பாவனை
3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் 4. கைத்தொழில் புரட்சி

02. மனித தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் எந்தவொரு செயற்பாடும்
1. விநியோகம் 2. நுகர்வு 3. உற்பத்தி 4. வணிகம்

03. தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முற்படும் பல்வேறு முறைகள்
1. விருப்பங்கள் 2. நுகர்வு 3. பயன் 4. விநியோகம்

04. விநியோகச் செயன்முறையில் இடைநடுவர் அல்லாதவர்
1. முகவர் 2. சில்லறை வியாபாரி 3. நுகர்வோர் 4. மொத்த வியாபாரி

05. தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்து கொள்வதற்காக பண்டங்களையும், சேவைகளையும் தாமாகவே உருவாக்கிக் கொள்ளும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்
1. முதல் உற்பத்தி 2. நேர் உற்பத்தி
3. நேரில் உற்பத்தி 4. சிற்றளவான உற்பத்தி

06. கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளுள் இலங்கை தொடர்பான மிகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
1. ஒரு சேவைத்துறை சார்ந்த நாடு 2. ஒரு விவசாய நாடு
3. ஒரு கைத்தொழில் நாடு 4. ஒரு ஏற்றுமதி சார்ந்த நாடு

07. பொருளாதாரச் சூழற்காரணியாகக் காணப்படுவன
1. வங்கி வீதம், விலைமட்டம், சர்வதேச உறவுகள்
2. வங்கி வீதம், பணவீக்கம், விழுமியங்கள்
3. வங்கி வீதம், விலைமட்டம், விழுமியங்கள்
4. வங்கி வீதம், விலைமட்டம், திறந்த பொருளாதா கொள்கைகள்

08. வணிகம் சமூகத்தின் விருப்பினைப் புரிந்து செயற்படல் அவசியமாகும். இச்செயற்பாடு உணர்த்துவது
1. வணிக கருத்து 2. வணிக வாய்ப்பு
3. வணிகத்தின் சமூகப் பொறுப்பு 4. வணிகத் திட்டம்

09. உற்பத்திச் செயன்முறையினை சரியாக எடுத்துக் காட்டுவது
1. செயற்பாடுகள் → உள்ளீடுகள் → வெளியீடுகள்
2. வெளியீடுகள் → செயற்பாடுகள் → உள்ளீடுகள்
3. உள்ளீடுகள் → செயற்பாடுகள் → வெளியீடுகள்
4. உள்ளீடுகள் → வெளியீடுகள் → செயற்பாடுகள்



kalvi.lk

10. பின்வருவன வணிக வளர்ச்சியின் கட்டங்களாகும்.

A – பணப்பாவனை  B – பண்டமாற்று முறை
C – தகவல் தொழில்நுட்பம்  D – கைத்தொழில் புரட்சி

வணிக வளர்ச்சியின் கட்டங்களை வரிசைக்கிரமமாக எடுத்துக் காட்டுக.

1. A B C D  2. B A C D  3. B D A C  4. B A D C

11. வணிகத்தின் அகச்சூழல் தொடர்பான ஒரு பலத்தையும் புறச்சூழல் தொடர்பான ஒரு வாய்ப்பையும் ஒழுங்கு முறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. சிறந்த நிதி உறுதித்தன்மையும் வினைத்திறனான முகாமையாளரது கிடைப்பனவுத் தன்மையும்
2. திறனுள்ள ஊழியர்கள் கிடைக்கக் கூடியதாக இருத்தலும் தொழில் வாய்ப்பில் பெண்களின் ஈடுபாடும்
3. உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான மதிப்புயர்வும், சனத்தொகை வயது அதிகரித்தலும்
4. வணிகங்களுக்கு ஆதரவான விதிகளை விதித்தலும், சரியான வணிகத்திட்டம் காணப்படலும்.

12. வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் மூலம் வணிகர் ஒருவருக்கான முக்கியமான அனுகூலம்

1. நிதியை இலகுவாகப் பெறமுடிதல்
2. தேவையான வளங்களை இனங்காண முடிதல்
3. ஊழியர்களுக்கு வணிகத்தைப் பற்றிய தெளிவை வழங்கக் கூடியதாக இருத்தல்
4. வணிகத்தின் இலக்குகளை அடைவதற்குச் சரியான வழிகாட்டல்களை வழங்கக் கூடியதாக இருத்தல்

13. வணிக அமைப்புக்களை உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்தும் போது கூட்டுறவு அமைப்பு எவ்வகைக்குள் உள்ளடக்கப்படும்.

1. இலாப நோக்கமற்ற வணிகங்கள்  2. தனியார் துறை
3. பொதுத் துறை  4. தனியுடமை வணிகம்

14. வணிகமொன்றை ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்குப் பல்வேறு சேவைகள் தேவைப்படுகின்றன. இச்சேவைகளை எவ்வாறு அழைக்கலாம்.

1. வியாபாரம்  2. வர்த்தகம்  3. விநியோகம்  4. துணைச்சேவை

15. சட்டத்தின் முன் தனிமனித அந்தஸ்துப் பெற்ற நிறுவனம் யாது?

1. தனிவியாபாரம்  2. பங்குடமை வியாபாரம்
3. வரையறுக்கப்பட்ட கம்பனி வியாபாரம்  4. தனியுடைமை வியாபாரம்

16. வணிகங்கள் ஆரம்பித்தது

1. பண்டமாற்று முறையின் விளைவாக  2. பணப்பாவனையின் விளைவாக
3. போக்குவரத்து முறையின் விளைவாக  4. கைத்தொழில் புரட்சியின் விளைவாக

17. யார், என்ன, எப்பொழுது, எங்கே, ஏன் என்பவற்றை உள்ளடக்கிய வணிக கட்டமைப்புடன் தொடர்புடையது.

1. வணிகத்தின் நடத்தை  2. நுகர்வோர் நடத்தை
3. அரசாங்க நடத்தை  4. சர்வதேச நடத்தை

18. உற்பத்தியில் அல்லது சேவைக்கருமங்களில் ஈடுபடும் வணிகம் ஒன்றை ஆரம்பித்து செயற்படுத்த ஒரு நபரோ அல்லது ஒரு குழுவினரோ ஒழுங்கமைப்பாக செயற்படல்

1. விநியோகம்  2. உற்பத்தி  3. வணிக அமைப்பு  4. வணிக சந்தர்ப்பம்



kalvi.lk

19. தயாளன் தனது சிற்றுண்டிச்சாலையை "அறுசுவையகம்" எனும் தனியுரிமையாண்மை வணிகமாக 1918இன் 6ம் இலக்க வணிகப்பெயர் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளார். இதன் மூலம் அவரது வணிகம் பெறக்கூடிய பிரதிபலன்கள் யாது?

1. வணிகத்தின் இருப்பு உறுதியாதல்
2. வணிகத்துக்கு தனித்துவம் கிடைத்தல்
3. சகல இலாபங்களையும் தாமே பெறுதல்
4. வருமானவரியில் இருந்து விலக்குப் பெறுதல்

20. பின்வருவனவற்றுள் விருப்பமாக கருதப்படுவது எது?

1. உணவுகள்
2. சோறு
3. உடைகள்
4. இருப்பிடம்

(20X1 = 20 புள்ளிகள்)

## பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01.
1. அமைவிடமற்ற வியாபாரம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்த அம்சம் யாது?
2. இலத்திரனியல் பணம் என்றால் என்ன?
3. தேவைகள் என்றால் என்ன?
4. நுகர்வு அடிப்படையில் உற்பத்தியின் பிரிவுகள் யாவை?
5. உற்பத்தி காரணிகள் என்றால் என்ன?

(5x4=20 புள்ளிகள்)

02.
1. இலங்கை மத்திய வங்கியினது அறிக்கையின்படி உற்பத்தியின் வகைகள் யாவை?
2. வணிகமொன்றைப் பதிவு செய்யக்கூடிய இரு முறைகள் எவை?
3. ஒற்றை வங்கி அமைப்பு முறை என்றால் என்ன?
4. கம்பனி வியாபாரம் எச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றது?
5. வணிகத் திட்டத்தினுள் உள்ளடங்கும் திட்டங்கள் யாவை?

(5x4=20 புள்ளிகள்)

03.
1. சிறப்புத் தேர்ச்சி என்றால் என்ன?
2. விநியோக முறைகளைக் குறிப்பிடுக.
3. பண்டமாற்று முறையில் காணப்பட்ட குறைபாடுகள் யாவை?
4. வியாபாரத் துணைச்சேவைகளில் இடம்பெறுவன எவை?
5. வணிக சூழலில் புறச்சூழல் காரணிகள் நான்கு தருக.

(5x4=20 புள்ளிகள்)

04.
1. தனியார் துறை வணிக அமைப்புக்களில் இடம்பெறும் நான்கு நிறுவனங்களைக் குறிப்பிடுக.
2. இலாபநோக்கமற்ற வணிகங்களில் இடம்பெறுவன யாவை?
3. கூட்டுறவின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
4. வணிகத்தைப் பதிவு செய்வதனால் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக.
5. மனிதவளத் திட்டமிடல் என்றால் என்ன?

(5x4=20 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457